**சுருக்கம்**

பழங்குடியினர் மேம்பாடு – 2021–2022 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – வன உரிமைச் சட்டம் 2006 – பூகோள தரவின் மூலம் அளவிடுதல் மற்றும் அளவிடப்பட்ட சர்வே நிறுவனங்களுக்கு நிலுவை தொகை வழங்குதல் – ரூ.70,08,619/– நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [ப.மே1(2)] துறை**

அரசாணை (நிலை) எண். 53

நாள் 12.07.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, ஆனி மாதம் 28 ஆம் நாள்
படிக்கப்பட்டது:-

பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண். ப.மே/அ3/2985/ 2020, நாள் 25.02.2021

*******

**ஆணை :-**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர், வன கிராமங்களில் வாழும் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்பவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களின் வன உரிமைகளை அங்கீகரிக்கும் வகையில் வன உரிமைச்சட்டம் 2006 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இச்சட்டத்தின்படி பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006 சட்டத்தின்படி 13.12.2005 ஆம் நாளுக்கு முன்பே வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினரும், முன்பு வனங்களில் 75 ஆண்டுகளாக குடியிருந்து வரும் பழங்குடியினர் மற்றும் 13.12.2005ஆம் தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக அதாவது 75 ஆண்டுகளாக பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போருக்கு வன உரிமைகள் பெறுவதற்கு தகுதி உடையவர்களாகிறார்கள் என்றும், வன உரிமைக்குழுக்கள், Gram Sabha(GS), Sub Divisional Level Committee (SDLC) மற்றும் District Level Committee (DLC) அளவில் அங்கீகரிக்கப்பட்ட தனி நபர் உரிமை கோரிக்கைகளின் வன நிலங்களை பூகோள தரவின் அடிப்படையில் (Digital Global Positioning System- DGPS Survey) நில அளவை செய்யப்பட்டு பழங்குடியின பயனாளிகளுக்கு உரிமைகள் வழங்கப்பட்டு வருகிறது என்றும், பழங்குடியினர் அங்கு விவசாயம் செய்து வருகின்றனர் என்றும் பிறமரபினர் 75 ஆண்டுகள் அல்லது மூன்று தலைமுறைகளாக விவசாயம் செய்து வருகின்றனர் என்பதை வன நிலங்களை பூகோள தரவின் அடிப்படையில் நில அளவை செய்யப்பட்டால் மட்டுமே தெளிவாக அறியமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், வன உரிமைச்சட்டம் 2006 சட்ட விதிமுறைகளின் படி வனத்தில் வாழும் பழங்குடியினர்களுக்கு தனி நபர் உரிமை மற்றும் சமுதாய உரிமையை விரைந்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், வனத்தில் வாழும் பழங்குடியினர்களிடமிருந்து 33,776 தனிநபர் உரிமைகள் கோரும் மனுக்கள் கிராமசபை மூலமாக பெறப்பட்டுள்ளது என்றும், அதில் 16,541 நபர்களின் விவசாய நிலங்கள் பூகோள தரவின் முறையில் 47012.186906 ஏக்கர்கள் அளவிடப்பட்டு 8,165 தனிநபர் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி, 16,541 நபர்களின் விவசாய நிலங்கள் பூகோள தரவின் முறையில் 47012.186906 ஏக்கர்கள் அளவிடப்பட்டதில், 5840.516 ஏக்கர் நிலங்களை அளவிடப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டிய தொகை ரூ.70,08,619/- (ரூபாய் எழுபது இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று பத்தொன்பது மட்டும்) ஒரு ஆண்டிற்கு மேல் சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்படாமல் உள்ளது என்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் 15,811 தனிநபர் உரிமை கோரும் மனுக்கள் பூகோள தரவின் (DGPS Survey) மூலம் அளவிடப்படாமல் நிலுவையில் உள்ளது என்றும், பழங்குடியினர் பூகோள தரவின் (DGPS Survey) மூலம் அளவிட ஒரு ஏக்கருக்கு ரூ.1200/-- செலவிடப்படுகிறது என்றும், தற்போது அளவிடப்படாமல் உள்ள தனிநபர் உரிமை கோரும் மனுக்களில் முதற்கட்டமாக 20833.33 ஏக்கர் நிலத்தினை பூகோள தரவின் (Digital Global Positioning System- DGPS Survey) மூலம் அளப்பதற்கு ரூ. 2,50,00,000/-- தேவைப்படுகிறது என்றும், எனவே பழங்குடியினர்களின் வனநிலங்கள் பூகோள தரவின் முறையில் அளவிடப்பட்டதில் சர்வே நிறுவனங்களுக்கு வழங்கப்படாமல் உள்ள நிலுவை தொகை ரூ.70,08,619/-- மற்றும் நிலுவையில் உள்ள தனிநபர் உரிமை கோரும் மனுக்களுக்கு பூகோள தரவின் முறையில் நிலங்களை அளவிடுவதற்கு ரூ.2,50,00,000/-- ஆக மொத்தம் ரூ.3,20,08,619/--ஐ 2020--2021 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (வருவாய் இனம்) செலவினம் மேற்கொள்ளுவதற்கு அனுமதி அளிக்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது, அதன் அடிப்படையில், பழங்குடியினர்களின் வனநிலங்கள் பூகோள தரவின் முறையில் அளவிடப்பட்டதில் சர்வே நிறுவனங்களுக்கு வழங்கப்படாமல் உள்ள நிலுவை தொகை ரூ.70,08,619/-- (ரூபாய் எழுபது இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று பத்தொன்பது மட்டும்)--க்கு 2021--2022 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> **"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் -- 02 பழங்குடியினர் நலன் -- 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் -- மாநிலச் செலவினங்கள் JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் -- 309 உதவித் தொகை 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை. "**
> **(த.தொ.கு . 2225 02 796 JY 30901 )"**
> **(OLD . 2225 02 796 JY 0912)"**

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று சம்பந்தப்பட்ட திட்ட அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.21374/நிதி[ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்]/2021, நாள் 05.07.2021-இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / திட்ட அலுவலர்கள்,
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8.

நகல்
நிதி [ஆதி(ம)பந / வ.செ.பொது–II] துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/கமபா/அநமு1) துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/7/21

பிரிவு அலுவலர்
12/7/2021